[2nd November 1966

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : காடுகள் துறை கன்னியாகுமரி மாவட்டத்தில் 1964-ம் ஆண்டில் 20 ஏக்கரா பரப்பளவிலும், 1965-ம் ஆண்டில் 21 ஏக்கரா பரப்பளவிலும் காட்டு வாகை மரங்களை முன்னேடி வகையில் பயிரிட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : முன்பு நான் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கிறபோது இந்த அல்பீஸியா மரம் குற்ருலம் மலையில் பயிர் செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் கொடுக்கப்பட்டது. அதுபற்றி அமைச்சர் அவர்களுக்குத் தகவல் இல்லையா? ராஜ்யம் முழுமைக்கும் இப்போது கேரளா, இலங்கை இந்தப் பகுதிகளில் இருந்துதான் கட்டுமரத்திற்காக வந்து கொண்டிருக்கும் இந்த மரம் போதுமானதாக இல்லாததால் ராஜ்யம் முழுவதிலும் எந்தெந்தப் பகுதிகளில் சாத்தியமோ அங்கங்கே இந்த அல்பீஸியா மரம் பயிர் செய்வது பற்றிக் கவனிக்கப்படுமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : எக்ஸ் பெரிமெண்டலாகத்தான் போட்டிருக்கிறேம். புதுமாதிரியான போட்கள் எல்லாம் வருவதன் காரணமாக இந்த மரத்திற்குக் கிராக்கி இருக்குமா, ஃபிஷர்மென்னுக்கு இவை தேவையாக இருக்குமா என்று தெரியவில்லை. இதை நட்டு, பத்து ஆண்டு களுக்குப் பிறகுதான் அதை வெட்டி கட்டுமரமாக ஆக்கமுடியும். ஆகவே கிராக்கி எப்படியிருக்கிறது, இதற்கு பிரியம் இருக்கிறதா என்று பார்த்துச் செய்யவேண்டும். இதற்குமேல் வைக்கும் உத்தேசம் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இப்போது ஸ்பெஷல் போட்ஸ் அல்லது மெக்கானைஸ்ட் போட்ஸ் வந்திருந்தும் ஆயிரக்கணக்கான பேர் கட்டுமரத்தை வைத்துக்கொண்டுதான் பிழைக்கிருர்கள். அந்தக் கட்டுமரத்திற்கான மரம் வெளியிலிருந்து வந்தது இப்போது தடைபட்டிருக்கிறது. ஆகவே உடனடியாக, அவசர மாக இதைக் கவனித்து இதற்கு ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இவ்வளவு தான் விவரங்கள் இருக்கின்றன. மேலும் ஏதாவது தெரிந்து கொள்ளவேண்டுமென்ருல் ஃபிஷரிஸ் டிப்பார்ட்மென்ட் மினிஸ்ட் ரிடம் கேட்கவேண்டும்.

Regional Khadi Godown in Madras

* 339 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether any manipulation of accounts of the Regional Godown in Madras between July 1964 and March 1965 resulting in loss to the State Khadi and Village Industries Board has been discovered; and

(b) if so, the details thereof?

2nd November 1966]

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANDRADIAR : (a) Yes.

(b) There were some irregularities in accounts resulting in a loss of Rs. 1,313.01.

திரு. வை. சங்கரன் : இதற்கு யார் பொறுப்பு என்று கண்டு பிடிக்கப்பட்டு விட்டதா ? அது சம்பந்தமாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கேஸ் ரிஜிஸ்டர் செய்திருக்கிறது. விஜயராகவன் என்ற அசிஸ்டென்ட் காரணமாக அவர் தவறு காரணமாகத்தான் இந்தக் குறைபாடு ஏற்பட்டிருக்கிறது.

நாகர்கோவிலில் பஸ் நிலையம்

* 340 கேள்வி.—திரு. நா. சௌந்திரபாண்டியன் : கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நாகர்கோவிலில் ஒரு பொது பஸ் நிலையம் அமைக்க அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்னென்ன ?

(இ) பஸ் நிலையம் எப்போது அமைக்கப்படும் ?

THE HON. SRI S. M. A. MAJID : (a) & (b) The draft declaration for acquisition of certain lands required for the exit and entrance of the Nagercoil bus stand has since been approved by the Government and the bus stand will be opened soon after the acquisition of the lands.

திரு. நா. சௌந்திரபாண்டியன் : அந்த பஸ் நிலையத்தை இந்த வருடத்திற்குள் திறக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இன்னும் இரண்டு மாதங்களுக்குள் நடக்கலாம். அதற்கு வேண்டிய துரிதமான நடவடிக்கைகள், நில ஆர்ஜிதத்தைத் துரிதப்படுத்த சர்க்கார் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. இரா. பொன்னப்ப நாடார் : சார், இதற்கு அடிக்கல் போட்டு எத்தனை வருடங்கள் ஆயிற்று என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அடிக்கல் போட்டு எத்தனை வருடங்கள் ஆயிற்று என்கிற விவரங்கள் என்னிடமில்லை. டைரக்டர் ஆஃப் டௌன் பிளானிங் அவர்களிடம் இந்தத் திட்டம் அனுப்பப்பட்டு அப்ரூவ் செய்யப்பட்டிருக்கிறது என்கின்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.